**ஜனவரி - 9**

**"உன்னை விசேஷித்தவனாகும்படி செய்கிறவர் யார்? உனக்கு உண்டாயிருக்கிறவைகளில் நீ பெற்றுக்கொள்ளாதது யாது? - 1கொரி 4:7**

கர்த்தருக்குத் தங்களை பிரதிஷ்டை செய்திருக்கிற எல்லா ஜனங்களும், தாங்கள் நிகழ்கால கிருபைக்குள்ளும் சத்தியத்திற்குள்ளும் வந்திருப்பது, தங்களுடைய சொந்த ஞானத்தினாலோ அல்லது மற்றவர்களுடைய ஞானத்தினாலோ அல்ல என்றும், ஆனால் கர்த்தருடைய ஞானத்தினாலும் கிருபையினாலுமே என்றும் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும். விசுவாச வீட்டில் தேவனுடைய ஜனங்களுக்கு எந்தப்பகுதியிலோ, எவ்விதத்திலோ கர்த்தருக்குப் பொறுப்புள்ள ஊழியக்காரராகப் பணியாற்றுகிற எல்லோரும், இதே கருத்தைக் கொண்டிருக்க வேண்டும். கர்த்தருடைய பிரதிநிதியாக ஊழியஞ்செய்யத் தங்களுக்குக் கிடைக்கிற சந்தர்ப்பங்களுக்காக அவ்வாறே உணர்ந்து அறிக்கையிட வேண்டும். ஆனால் அறிக்கையிடுவதை கைவிடுவது அதை சரியானபடி உயர்வாக மதிக்கத் தவறிவிட்டதையே குறிக்கிறது. **- Z '03, 430 (R 3277).**

ஜீவியத்தின் முக்கியமான காரியங்களில், தேவனுடைய ஊழியம் சம்பந்தமாகத் தங்களுக்குள்ள இயற்கையான புத்தியிலோ, பதவியிலோ அல்லது சிலாக்கியத்திலோ நாம் மற்றவர்களைவிட வேறுபட்டிருப்பது நம்மிடத்திலிருந்து வருகிறதில்லை. ஆனால், தேவனிடத்திலிருந்து வருகிறது. ஒருவரிலிருந்து மற்றொருவரை வேறுபட அவரே செய்கிறார். ஆகையால், கர்த்தருடைய ஊழியத்தில், நம்முடைய நிலையின் சார்பாக உள்ள நமக்கிருக்க வேண்டிய சரியான மனப்பாங்கு, தாழ்மை. தற்பெருமை விலக்கப்பட்டிருக்கிறது ஏனென்றால், எல்லாம் அவருடைய தயவிலிருந்து கிடைக்கிறது.

**-P '30, 14.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**யாக் 1:17; யோவா 3:27; 1கொரி 12:11; ரோம 12:3,6; 1பேது 4:10; எபே 2:8,9; பிலி 2:13; மீகா 6:8; மத் 5:3; லூக் 14:11; 17:10; 22:24-27; 1கொரி 1:28,29.**

**கோபுர வாசிப்பு : Z '13, 231 (R 5284).**

**வினாக்கள் : இந்த வசனத்தின் சம்பந்தமாக இந்த வாரத்தின் அனுபவங்கள் என்ன? அவை எவ்வாறு சமாளிக்கப்பட்டது? அவை எதில் முடிந்தன?**